# சினிமா

## மனதை நெகிழ வைத்த 'வீடு'

கானா பிரபா
*(மடத்துவாசல் பிள்ளையாரடியில்)*




ஆயுதக் கலாச்சாரமும் றவுடியிசமும் தான் சினிமா என்றாகிப் போய் விட்ட இன்றைய தமிழ் சினிமாவை எண்ணி நொந்து கொண்டிருப்பதை விட கலைப் படைப்புகளாக வெளிவந்த அன்றைய சினிமாவைப் பார்ப்பது மேலென்ற எண்ணத்தால் நான் பார்த்து ரசித்த படம் தான் பாலு மகேந்திராவின் வீடு.

1988இல் வெளிவந்த இந்தப் படத்தில் அர்ச்சனா, சொக்கலிங்க பாகவதர், பானுசந்தர், பசி சத்யா ஆகியோர் நடித்திருந்தார்கள். நடிகை அர்ச்சனாவிற்குச் சிறந்த நடிகை என்ற தேசிய விருதையும் இந்தப் படம் பெற்றுக் கொடுத்தது.

பெற்றோரை இழந்து தன் தங்கையுடனும் தாத்தாவுடனும் வாழும் நாயகி, அவளின் ஒரே சம்பளத்திலும் தாத்தாவின் பென்ஷன் பணத்திலும் தான் இவர்களின் குடும்ப வாழ்வை நகர்த்த வேண்டிய நிர்ப்பந்தம். இந்த நிலையில் வாடகைக்கு வீடு தேடிக் களைத்துப் போய், அவளின் தாத்தாவின் எதிர்ப்பையும் மீறி சொந்த வீட்டைக் கட்டவேண்டும் என்று அவள் தீர்மானிக்கும் போது சந்திக்கும் சோதனைகள் தான் இப்படம்.

தன் குடும்ப பட்ஜட்டைக் கணக்குப் பார்த்து ஐநூறு ரூபாய் தான் வாடகைக்கு முடியும் என்று தீர்மானித்து வாடகைக்கு வீடு தேடி அலைவது, பின்னர் வீடு கட்டுவது என்று முடிவெடுத்துத் தனிமனுஷியாகத் தன் அலுவலக வேலையும் பார்த்து அதே நேரத்தில் கட்டுமான மேற்பார்வையையும் பார்த்து, தன் குடும்பத்தையும் சுமக்கும் அர்ச்சனாவின் பாத்திரம் நூறு வீடு கட்டக்கூடிய கொன்கிறீற் கற் சுமைக்குச் சமனானது.

வீட்டு லோன் வாங்க அலைவது, வீடு கட்டப் பணம் தருகிறேன் பேர்வழி என்ற தோரணையில் தன் சபலப் புத்தியைக் காட்டும் அலுவலக மேலதிகாரியின் செயல் கண்டு வெம்பிக் கலங்குவது, மழை வெள்ளம் வந்து அந்த நாட்கட்டுமானப் பணி குழம்பிநாட்கூலியைக்கொடுக்கும் நிர்ப்பந்தத்தில் தன் மனச் சோர்வு படுவது, கடன்கேட்டுப் போய்த் தன் அலுவலக நண்பியின் வீட்டில் அவமானப் பட்டு நிற்பது, கட்டட ஒப்பந்தக் காரரின் சில்லறைத் திருட்டுக்களைக் கண்டு புளுங்குவது, ஒரு கட்டத்தில் கட்டட ஒப்பந்தக்காரர் வீட்டுக் கட்டுமானப் பணியிலிருந்து ஒதுங்கும் போது நிர்க்கதியாய் இருப்பது,குடிநீர் வாரியத்திற்குச் சொந்தமான காணியை வாங்கி ஏமாற்றப்பட்டு இடிந்து போவது என்று, அப்பப்பா இந்த நடிகையின் நடிப்பில் எத்தனை பரிமாணங்கள். இவருக்குத் தேசியவிருதை விட இன்னும் ஏதாவது உயர்ந்த விருது கொடுத்தாலும் தகும். நடுத்தரவர்க்கத்து நாயகி வேடத்திற்குப் பொருத்தமாக, முகத்திற்கும் அவர் நடிப்பிற்கும் அரிதாரம் போடத்தேவையில்லாத சிறந்த நடிகை இவர்.

தன் தங்கைக்குப் புதுச்சட்டை வாங்கித் தர முடியாத தன் இயலாமை, தன் காதலன் தந்த பிறந்த நாள் சேலைக்குப் பதில் பணமாகவே வைத்திருந்தால் வீடு கட்டும் செலவோடு சேர்த்திருக்கலாமே என்ற ஆதங்கம் இவையும் மனதிலிருந்து விடுபட முடியாத காட்சிகள்.

அர்ச்சனாவின் அலுவலக நண்பராகவும் காதலனாகவும் வரும் பானுச்சந்தர் ஜோல்னாப் பையும் கண்ணாடியுமாக வந்து அர்ச்சனாவின் ஏழ்மைக்குத் தானும் சளைத்தவர் இல்லை என்பது போலவும், தன் தங்கைக்குச் சேர்த்து வைத்த பணத்தை அர்ச்சனாவிற்குத் தெரியாமல் அர்ச்சனாவின் வீட்டுக் கட்டிடப் பொருட்களுக்குச் செலவழிப்பதும் பின்னர் அது தெரிந்து அர்ச்சனா கோபங்கொள்ளும் போது தன் உதவியை அவள் ஏற்கவில்லையே என்ற ஆதங்கத்தில் சினம் கொள்வதும், பின் அவளுக்கு ஆறுதலாகத்தன் தோள் கொடுப்பதுமாக அவர் நிறைவாகவே தன் பாத்திரப் படைப்பை வெளிப்படுத்தியிருக்கிறார்.

ஏழைக்கு ஏழைதான் உதவி என்பது போல, வீட்டுக் கட்டுமானங்களில் இடையூறு வரும் போது அர்ச்சனாவிற்கு ஆறுதலாகவும், உதவியாகவும் தோள் கொடுக்கும் கட்டிடத்தொழிலாளியாக வரும் 'பசி' சத்யாவின் பாத்திரமும் மிக இயல்பாகப் படைக்கப்பட்டிருக்கின்றது.

நடுத்தரவர்க்கத்துச் சமுதாயக் கதைகளைப் படைக்கும் போது அவர்களின் வாழ்வியலைப் போலவே வெளிறிப் போன பார்வையில் படத்தின் ஒளிப்பதிவு அமைந்திருப்பது இன்னும் அணி சேர்க்கின்றது. இப்படியான ஒளியமைப்பின் மூலம் தான்சொல்லவந்த கதையை இன்னும் மெருகேற்றலாம்.

சில்க் சுமிதா, அனுராதா காலத்தில் வந்த படம் என்றாலும் நல்லவேளை அவர்களின் கால்ஷீட் இப்படத்தில் பயன்படாதது அவர்கள் இப்படியான கலைத்துவம் மிக்க சினிமாவிற்குச் செய்த பெரிய சேவை.

இப்படத்தைப் பற்றிப் பேசும் போது தவிர்க்கமுடியாத அல்லது தவிர்க்கக் கூடாத இன்னொரு பாத்திரம் அர்ச்சனாவின் தாத்தாவாக வரும் சொக்கலிங்கபாகவதர்.

வாடகைவீடு தேடி அலையும் போது ஒரு வீட்டில் மடிசார் மாமியக்கண்டு 'பிராமின் பாமிலி' என்று அர்ச்சனாவின் காதுக்குள் கிசுகிசுக்கும் தோரணை, ஒரு வாடகை வீடு இவர்களுக்குப் பிடித்துப் போய் வீட்டுச் சொந்தக்காரன் அடுத்த நாள் வந்தால் முடிவு சொல்வதாகச் சொல்லும் போது மறுநாள் சீககிரமே எழும்பி கடவுளை நன்றாகக் கும்பிட்டு விட்டு வெள்ளைச் சட்டை வேஷ்டியுடன் தன் குடையை விரித்து அதன் நிழலில் மிடுக்காக நடந்து கொண்டே 'வேயுறு தோளி பங்கன்' என்று உரக்கப் பாடிக்கொண்டு அந்த வீட்டுக்காரனைப் பார்க்கச் செல்வது, ஆனால் அந்த வீடு கைநழுவிவிட்டது தெரிந்து மீண்டும் தன்வீடு நோக்கி நகரும் போது தலையத்தொங்கப் போட்டபடி தன்குடையை விரிக்காது தள்ளாட்டமாகச் சுருங்கிய முகத்துடன் நடப்பது , என்று இந்தக்காட்சியில் அவரின் முழுப்பரிமாணமுமே வெளிப்படுகின்றது.

கலைத்துவமான படங்களைத் தேடும் அனைவரும் பார்க்கவேண்டிய அருமையான ஒரு கலைப் படைப்புத் தான் வீடு.



## தமிழ் சினிமாவின் மற்றுமோர் இழப்பு

வில்லன், ஹிரோ, குணசித்திரம் என பல்வேறு பாத்திரங்களில் நடித்த மிகச் சிறந்த நடிகரான ரகுவரன் தன்னுடைய 59ம் வயதில் காலமானார்.

என்பதுகளில் தமிழில் அறிமுகமான முக்கிய நடிகர்களில் ஒருவரான ரகுவரன் 'நடித்த சம்சாரம் அது மின்சாரம்', 'மக்கள் என் பக்கம்', மனிதன்', 'ராஜா சின்ன ரோஜா', 'பாட்ஷா' மற்றும் 'முதல்வன்' ஆகிய படங்களில் மிகச் சிறந்த நடிப்பாற்றலை வெளிப்படுத்தியிருந்தார்.

கே.எஸ்.ரவிகுமாரின் 'புரியாத புதிர்' படத்தில் சைகோத்தனமான வில்லன் என்ற பாத்திரத்துக்கு புதிய பரிமாணம் கொடுத்திருப்பார் ரகுவரன்.

இடையில் 'கூட்டுப்புழுக்கள்', 'மைக்கேல் ராஜ்', 'என்வழி தனிவழி' போன்ற படங்களில் கதாநாயகனாகவும் நடித்தார். இதில் 'கூட்டு புழுக்களில்' அவரது எதார்த்தமான நடிப்பு மறக்க முடியாதது.

சமீபத்தில் ரிலீசான 'தொடக்கம்' படத்தில் அப்துல்கலாம் வேடத்தில் நடித்திருந்தார் ரகுவரன். அவர் நடித்து கடைசியாக வந்த படம் 'சில நேரங்களில்'. இதில் சைக்கோத்தனமான மருத்துவர் வேடத்தில் நடித்திருந்தார்.

1948ம் ஆண்டு டிசம்பர் 11ம் தேதி கோவையில் பிறந்தவர் ரகுவரன். இவரது குடும்பத்தின் பூர்வீகம் கேரளா.

'ஏழாவது மனிதன்' படம்தான் ரகுவரன் நடித்த முதல் படம். அதன் பின்னர் தொடர்ந்து பல்வேறு படங்களில் நடிக்க ஆரம்பித்தார். தமிழ் தவிர தெலுங்கு, இந்தி உள்ளிட்ட பல்வேறு மொழிப் படங்களில் நடித்துள்ளார்.

ஹிரோவாக நடிக்க ஆரம்பித்த ரகுவரன் பின்னர் வில்லன் கேரக்டர்களுக்கு மாறினார். இதுதான் அவரது பன்முக நடிப்புக்கு வழிவகுத்தது. வித்தியாசமான வில்லத்தனத்தைக் காட்டி நடித்த ரகுவரனுக்கு குறுகிய காலத்திலேயே பெரும் பெயர் கிடைத்தது.

சத்யராஜுடன் நடித்த 'மக்கள் என் பக்கம்', 'பூவிழி வாசலிலே', 'என் பொம்முக்குட்டி அம்மாவுக்கு' உள்ளிட்ட பல படங்களில் வித்தியாசமான வேடங்களில் கலக்கினார்.

'ஒரு மனிதனின் கதை' என்ற தொலைக்காட்சித் தொடரில் அவரது நடிப்பு வெகுவாக பேசப்பட்டது. அதில் நல்ல குடும்பத்தைச் சேர்ந்த ஒருவன் குடிகாரனாக மாறி கடைசியில் எப்படி சீரழிகிறான் என்பதுதான் அந்த தொடரின் கதை.

ரகுவரனின் நடிப்புக்குப் பெயர் போன படங்கள் 'அஞ்சலி', 'பாட்ஷா', 'புரியாத புதிர்', 'முதல்வன்' என பல படங்களை அடுக்கிக் கொண்டு செல்லலாம்.

தனது நடிப்பாற்றலால், தென்னாட்டு 'அல் பசினோ' என்றும் புகழப்பட்டவர் ரகுவரன். அவரது மரணம், தமிழ்த் திரையுலகுக்கு பெரும் இழப்பு என்பதில் சந்தேகம் இல்லை.

*- thats tamil*

அரங்கேற்ற மலர்கள் | விழா மலர்கள் |
அழைப்பிதழ்கள் | நினைவு மலர்கள்
விளம்பர பிரசுரங்கள் | தமிழ் தட்டச்சு மற்றும்
அனைத்து அச்சு வேலைகளுக்கும்....

**seven** | zero
graphic designers
**020 7043 4319**
45B Crusoe Road | Mitcham | Surrey CR4 3LJ



creative artwork from **concept to design**